மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள், புதன்கிழமை,
அசல் வழக்கு எண்.223/2018
[CNR No:TNTT06- 000269-2018]
-----

1) வசந்தா
2) முத்துலட்சுமி ...வாதிகள்

/எதிர்/

1) பெரியகருப்பசாமி (இறப்பு)
2) செல்வம்
3) விஜயா
4) பாலமுருகன் ...பிரதிவாதிகள்
(இ.ம.எண்.1/2024 மனு 24.09.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் 1 ம்பிரதிவாதியின் பெயருக்கு பின்னால் இறப்பு சேர்க்கப்பட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது)

இவ்வழக்கு 15.04.2026 அன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வரப்பெற்று வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.உ.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், 1 ம்பிரதிவாதி வழக்கு விசாரணையின் போது 06.02.2024 ம் தேதி இறந்துவிட்டதாக 14.02.2024 ம் தேதி குறிப்பாணை தாக்கல் செய்தும், 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பாண்டித்துரை அவர்கள் ஆஜராகியும், 3 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.சாரதா அவர்கள் ஆஜராகி, வா.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 15.09.2025 ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதிகள் மற்றும் 2, 4 பிரதிவாதிகள் தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:19:44 +0530

## தீர்ப்புரை

1) பிராது தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/6 பங்கு நயமிதம் பார்த்து தனித்து சுவாதீனம் பெற ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், மற்றும் வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்–**

தபசில் சொத்தானது ஆதியில் 1ம்பிரதிவாதியின் தகப்பனாரும், வாதிகள் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தாவுமான இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்து, கடந்த 2002ம் ஆண்டு இறந்துவிட்டார். அதன்பின்னர் தபசில் சொத்தை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டு குடும்ப சொத்தாக, எந்தவித பாகப்பிரிவினையும் நடைபெறாமல் அனுபவம் செய்து வந்தனர். வாதிகள் தபசில் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவது பிரதிவாதிகளுக்கு பிடிக்கவில்லை என்றும், பிரதிவாதிகள், வாதிகளுக்கு தெரியாமல் கிரையம் செய்ய முயற்சி செய்து வந்த விவரம் தெரிந்து வாதிகள் தங்களுக்குரிய பாகத்தை பிரித்து தரக்கேட்டு வழக்கறிஞர் மூலம் 26.06.2018ல் அறிவிப்பு அனுப்பியதை, 2 முதல் 4 பிரதிவாதிகள் வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்டனர். 1ம்பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி 14.07.2018ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். 1ம்பிரதிவாதியின் மக்களான வாதிகள் பெண் மக்களாக இருப்பதால் தங்களுக்குரிய 2/6 பாகத்தை பிரித்துக் கொடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:19:56 +0530

**3) 1ம்பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 2, 4 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், 3ம்பிரதிவாதி குறிப்பாணை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதின் சுருக்கம்–**

பிராது சங்கதிகளை மறுத்துரைத்து தாவா சொத்து வாதியின் தாத்தா இசக்கிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவர் இறக்கும் வரை அனுபவம் செய்து வந்தார் என்பதை மறுத்துரைத்து வாதிகளின் தாத்தா இசக்கிமுத்து கடந்த 2002ம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதையும், அவருக்கு 1ம்பிரதிவாதி மட்டும் வாரிசு என்பது உண்மை. தாவா சொத்தை வாதிகளும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும், குடும்ப சொத்தாக இருந்து வந்ததாக சொல்வதும் உண்மையல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் 2/6 பங்கு உண்டு என்பது உண்மையல்ல. தாவா சொத்து 1ம்பிரதிவாதிக்கு 21.09.1981 தேதிய பதிவு கிரைய ஆவணத்தின் மூலம் திருநெல்வேலி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற அ.வ.எண்.139/1968ன்படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டு, அனுபவித்து வந்து, பட்டா எண்.254 ஏற்பட்டு, அவரது விருப்பத்திற்கு ஏற்ப 1ம்பிரதிவாதி தாவா சொத்தை 24.02.2017ல் அவரது குமாரர்களான 2, 4 பிரதிவாதிகளுக்கு பதிவு ஏற்பாட்டு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதால் அதனை வாதிகள் கேள்வி கேட்க உரிமையில்லை என்றும், வாதிகளுக்கு தந்தை என்ற நிலையில் 1ம்பிரதிவாதி தக்க சீர் சீராட்டு கொடுத்து திருமணம் செய்து வைத்துள்ளார் என்றும், வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும், 2, 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ள ஏற்பாட்டு ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் பங்குரிமை கோரியது கிடைக்கத்தக்கதல்ல என்று வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:13 +0530

**<u>4) வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன–</u>**

1) தபசில் சொத்தில் வாதிகளுக்கு 2/6 பங்கு கிடைக்கத்தக்கதா?
2) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**5) இவ்வழக்கில்,** வாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக 1ம்வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதிகள் தரப்பு வழக்கிற்கு கூடுதல் ஆதரவாக திவ்யா என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.4 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரைக்கு ஆதரவாக 2ம்பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>நீதிமன்ற பரிசீலனையும், தீர்வுகளும்</u>**

**<u>6) 1வது எழுவினாக்கான தீர்வு–</u>**

**6(1)** தாவா சொத்தானது ஆதியில் 1ம்பிரதிவாதியின் தந்தையும், வாதிகள் மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகளின் தாத்தாவுமான இசக்கிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டு, அனுபவித்து வந்து அவர் கடந்த 2002ம் ஆண்டு இறந்த பின்னர், தபசில் சொத்தை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டுக்குடும்ப சொத்தாக எவ்வித பாகப்பிரிவினையும் நடைபெறாமல் அனுபவித்து வந்தனர் என்றும், பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் செய்ய முயற்சி செய்து வந்தனர் என்றும், வாதிகள் 26.06.2018ல் பாகப்பிரிவினை கோரி அறிவிப்பு அனுப்பி,

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:19 +0530

அறிவிப்பை 2, 3, 4 பிரதிவாதிகள் வாங்க மறுத்தும், 1ம்பிரதிவாதி பெற்றுக்கொண்டு உண்மைக்கு புறம்பாக 14.07.2018ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். தாவா சொத்தை பொறுத்து 2/6 பாகம் கோரி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

**6(2)** பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து வாதிகள், 2, 3, 4 பிரதிவாதிகளின் தாத்தா இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும், உறவுமுறை மட்டும் ஒப்புக்கொண்டும், தாவா சொத்து 1ம்பிரதிவாதி 21.09.1981ல் பதிவு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு, அவரது பெயருக்கு பட்டா எண்.254 ஏற்பட்டு தனித்த சொத்து என்பதால் அவரது மக்களான 2, 4 பிரதிவாதிகள் 24.02.2017ல் ஏற்பாட்டு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதால் வாதிகளுக்கு பங்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், 2, 4 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்ட ஏற்பாட்டு ஆவணத்தை ரத்து செய்யாமல், பாகம் கோரிய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் இருந்து வரவில்லை என்பதால் நீதிமன்ற கட்டணம் தவறு என்றும், வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**6(3)** வாதிகள் தரப்பில் 1ம்வாதி வா.சா.1 ஆக பிராது சங்கதிகளை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தாவா சொத்திற்குரிய SLR நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 26.06.2018ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், 14.07.2018ம் தேதியிட்ட பிரதிவாதியின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணையில் **"தாவா சொத்து இசக்கிமுத்து என்பவருக்கு எப்படி பாத்தியம் என்றால் தனித்து பாத்தியப்பட்டது. தாவா சொத்து 24.02.2017ல் எனது தகப்பனார் 2, 4 பிரதிவாதிகளுக்கு ஏற்பாடு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தை 2, 4 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய ஏற்பாட்டு ஆவணத்தை ரத்து செய்ய வருவாய் கோட்டாட்சியரிடம்**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:24 +0530

**மனு தாக்கல் செய்த போது நான் சென்றிருந்தேன் என்றால் சரிதான். அந்த மனுவிற்கு உத்தரவு போடப்பட்டுள்ளதா என்றால் இதுவரை இல்லை. 21.09.1981ல் எனது தந்தை பெரிய கருப்பசாமி கிரையம் வாங்கினார் என்றால் யாரிடமும் கிரையம் வாங்கவில்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6(4)** வா.சா.2 ஆக 1ம்வாதியின் மகள் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக 20.04.2022ம் தேதியிட்டு வருவாய் கோட்டாட்சியர் அனுப்பிய விசாரணை அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 குறுக்குவிசாரணையில் **"1ம்வாதி எனது தாயார் என்றால் சரிதான். 2, 4 பிரதிவாதிகள் வாங்கிய ஆவணத்தை ரத்து செய்து கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா எழுதிக்கொடுத்த நாள் முதல் 2, 4 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரிடம் 2022ம் ஆண்டு 1ம்பிரதிவாதியுடன், எனது தாயாரும் சேர்ந்து தான் மனு கொடுத்தார் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6(5)** பிரதிவாதிகள் தரப்பில் 2ம்பிரதிவாதி பி.சா.1 ஆக தனது எதிர்வழக்குரைக்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்து 21.09.1981ல் சுப்பையா என்பவர் 1ம்பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து கொடுத்த கிரைய ஆவணம் அசல் பி.சா.ஆ.1 ஆகவும், 04.02.1981ம் தேதிய இசக்கிமுத்து என்பவர் சுப்பையாவுக்கு கொடுத்த கிரைய ஆவணத்தின் அசல் பி.சா.ஆ.2 ஆகவும், பட்டா எண்.254 பி.சா.ஆ.3 ஆகவும், 1ம்பிரதிவாதி, 2ம்பிரதிவாதிக்கும், 4ம்பிரதிவாதிக்கும் எழுதி வைத்த ஏற்பாட்டு ஆவணம் பி.சா.ஆ.4, பி.சா.ஆ.5 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.1 குறுக்குவிசாரணையில் **"தாவா சொத்து ஆரம்பத்தில் எனது தாத்தா இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் 1978ல் திருநெல்வேலி**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:30 +0530

**நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்று 21.09.1981ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 21.09.1981ல் சுப்பையாவிடம் இருந்து எனது தந்தை பெரியகருப்பசாமி கிரையம் பெற்றதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்திற்கு பின்னர் தான் பெரிய கருப்பசாமி, சுப்பையாவிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டது என்பதால் வழக்கின் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் இசக்கிமுத்து விற்பனை செய்துவிட்டதால் அவர்களுக்கு சொத்து இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6(6)** இருதரப்பிலும் எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதிகள் மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகள், 1ம்பிரதிவாதியின் மக்கள் என்பதும், 1ம்பிரதிவாதியின் தந்தை இசக்கிமுத்து 2002ம் ஆண்டு காலம் சென்றுவிட்டார் என்பதும், 1ம்பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து, 06.02.2024ல் காலம் சென்றுவிட்டார் என்பதும், 1ம்பிரதிவாதி 2, 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தி கொடுத்த ஏற்பாட்டாவணத்தை ரத்து செய்ய கோரி 1ம்வாதியுடன் சேர்ந்து வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவில் இதுவரை உத்தரவு பிறப்பிக்கவில்லை என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். வாதிகள் பிராது தாவா சொத்து வாதிகளின் தாத்தாவும், 1ம்பிரதிவாதியின் தந்தையுமான இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டதாக கண்டும், கூட்டு அனுபவத்தில் இருந்து வருவதாக பாகப்பிரிவினை வழக்கு கோரி தாக்கல் செய்துள்ளார். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 SLR ஆவணத்தில் தாவா சர்வே எண்.77/2 ஹெக்டேர் 2.12.5 சுப்பிரமணியன் மகன் இசக்கிமுத்து (1), ஈஸ்வரன் மகன் சுந்தரராஜ் (2), சுப்பன் மகன் சுடலை (3), சண்முகம் மகன் சங்கரலிங்கம் (4), சுப்பன் மகன் மாடன் (5), சுப்பிரமணியன்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:37 +0530

மகன் இசக்கிமுத்து (6), ஊர்காவலன் மனைவி செவனியம்மாள் (7), ஆகியோர் பெயருக்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது. பி.சா.ஆ.2 ஆறுமுகம் குமாரர் இசக்கிமுத்து, முத்து குமாரர் சுப்பையாவுக்கு 04.02.1981ல் தாவா சொத்து சர்வே எண்.77 நிர் 2ம் லட்டர் ஹெக்டேர் 2.12.5க்கு ஏக்கர் 5 செண்ட் 26ல் பிரிவின்றி என் பாகம் ஏக்கர் 2 செண்ட் 63 கிரையம் கொடுத்துள்ளார். அந்த கிரைய ஆவணத்தில் எனக்கும், எனது மூத்த தார மக்களுக்கும் சப்கோர்ட் தீர்ப்பு அ.வ.எண்.139/1968 திருநெல்வேலி I.A.No.687/1970ன்படி என் பாகத்திற்கு கிடைத்து நான் நாளது தேதி வரை நிராட்சேபணையாக ஆண்டு அனுபவித்து வரும் சொத்தை ஏற்கனவே கொடுத்த ஒத்தி தொகை ரூ.600/−ஐ உட்படுத்தி கிரையத்தொகை ரூ.1,000/−ஐ கிரையம் பெறுபவரிடமிருந்து நிறுத்தம் செய்து பகுதி கிரைய தொகையான ரூ.2,950/− ரொக்கமாக பெற்றுக்கொண்டு கிரையம் கொடுத்துள்ளார். பி.சா.ஆ.1ன்படி மேற்படி கிரையம் பெற்ற சுப்பையாவிடம் இருந்து 1ம்பிரதிவாதி தாவா சர்வே எண்.77/2ல் 2 ஏக்கர் 63 செண்டை கிரையம் பெற்றுள்ளார்.

**6(7)** வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1ன்படி 5 ஏக்கர் 26 செண்டுக்கு வாதிகளின் தாத்தாவாக சொல்லப்படும் 1ம்பிரதிவாதியின் தந்தை இசக்கிமுத்துவின் தந்தை பெயர் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி இசக்கிமுத்து கிரையம் கொடுத்ததாக பி.சா.1னிடம் வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையில் கேள்வி கேட்கப்பட்டு பி.சா.1 கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்திருப்பதால் பி.சா.ஆ.2 ஆவணத்தில் இசக்கிமுத்துவின் தந்தை பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 SLR ஆவணத்தில் ஆறுமுகம் குமாரர் இசக்கிமுத்து என்று பட்டாதாரர்களில் குறிப்பிடப்படவில்லை. பிரதிவாதி தாவா சர்வே எண்ணில் 2ஏக்கர் 63 செண்டை பொறுத்து பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆவணத்தின்படி 1ம்பிரதிவாதிக்கு கிரையம் ஏற்பட்டு, 1ம்பிரதிவாதி அவரது ஆயுட்காலத்திலேயே

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:42 +0530

2, 4 பிரதிவாதிகளுக்கு பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ஆவணத்தின் மூலமாக தாவா சொத்து சர்வே எண்.77/2ல் கண்ட 5 ஏக்கர் 26 செண்ட் முழுவதையும் ஏற்பாட்டாவணம் எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.1, வா.சா.2 குறுக்குவிசாரணையில் 2, 4 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்ட பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ஆவணம் பற்றி தெரியும் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்தும், வா.சா.2 ஆவணம் எழுதிக்கொடுத்தது முதல் பிரதிவாதிகள் தனித்து அனுபவம் செய்து வருவதை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்தும், 2, 4 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்ட பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி வாதிகளின் தாத்தாவான இசக்கிமுத்து பாகப்பிரிவினை மூலமாக கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட சொத்தை அவரது ஆயுட்காலத்திலேயே 3ம்நபரான சுப்பையாவுக்கு கிரையம் கொடுத்து, 3ம்நபர் சுப்பையாவிடமிருந்து 1ம்பிரதிவாதி பி.சா.ஆ.1ன்படி தனித்து கிரையம் பெற்று 2, 4 பிரதிவாதிகள் ஏற்பாடு ஆவணம் எழுதி வைத்திருப்பதால் பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆவணத்தை வாதிகள் தரப்பில் ரத்து செய்ய பரிகாரம் கோராமல் தாவா சொத்து சர்வே எண்.77/2ல் கண்ட 5 ஏக்கர் 26 செண்ட் முழுவதும் வாதிகளின் தாத்தா இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டது என்பதை வாதிகள் தரப்பில் ஆவணங்கள் மூலம் நிரூபித்து போகாததால் வாதிகள் வழக்கில் கோரும் தாவா சொத்தில் 2/6 பங்கு வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 1வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>7) 2வது எழுவினாக்கான தீர்வு–</u>**

1வது எழுவினா வாதிகளுக்கு எதிராக தீர்வு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 2வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**8) இறுதியாக,** வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:20:51 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் எழுதி விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 03.06.2026 இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.03 15:20:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**வாதிகள் தரப்பு சாட்சிகள் –**

வா.சா.1 – வசந்தா

வா.சா.2 – திவ்யா

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் –**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 07.12.2016 ம் தேதிய வாதிகளின் தாத்தா பெயரில் உள்ள SLR நகல் பதிவேட்டு ஆவணம் |
| வா.சா.ஆ.2 | 26.06.2018 ம் தேதியில் வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 14.07.2018 ம் தேதியிட்ட 1 ம்பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.4 | 20.04.2022 ம் தேதியிட்ட கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அனுப்பிய விசாரணை அறிவிப்பு |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி–**

பி.சா.1 – செல்வன்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் –**

| | |
|---|---|
| பி.சா.ஆ.1 | 21.09.1981 ல் சுப்பையா, 1 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் 6 தாள்கள் |
| பி.சா.ஆ.2 | 04.02.1981 ல் இசக்கிமுத்து, சுப்பையாவுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் 12 தாள்கள் |
| பி.சா.ஆ.3 | 1 ம்பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண்.254 நகல் |

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.03 15:21:08 +0530

| | |
|---|---|
| பி.சா.ஆ.4 | 24.02.2017 ல் 1ம்பிரதிவாதி, 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்து ஏற்பாட்டாவணம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.5 | 24.02.2017 ல் 1ம்பிரதிவாதி, 4ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாட்டாவணம் அசல் |

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.03 15:21:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
கோவில்பட்டி,
அ.வ.எண்.223/2018
[CNR No.TNTT06-000269-2018]
வரைவு/நேரிய/தீர்ப்புரை
நாள்-03.06.2026